விலை: சதம் 75

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8174

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆடி 5 — யாழ்ப்பாணம்
நம்மான் 17 — திங்கட்கிழமை
இதழ் 156 — 20-7-1981

எல்லாவித
இரும்புக் கம்பிகளுக்கும்
தொலைபேசி: 508
ராம்சன்ஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
19, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மாவட்ட அபிவிருத்தி சபைகள் இன்று கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் நான்காம் திகதி நடைபெற்ற 'குட்டிப் பொதுத் தேர்தல்' மூலம் தெரிவுசெய்யப்பட்ட இருபத்துநான்கு மாவட்ட அபிவிருத்திசபைகளும் இன்று முதல் இயங்கத் தொடங்கும்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் அங்குரார்ப்பணக்கூட்டம், இன்று காலை 10-45க்கு சுபவேளையில் ஆரம்பமாகும். அங்குரார்ப்பண வைபவத்தைத் தொடர்ந்து, பன்னிரண்டு அம்சத்தின்கீழ் தயாரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக்கூட்டம் இன்று காலை ஆரம்பமாவதற்கு முன்னர் சபை அங்கத்தவர்களும் கூட்டணி எம்.பி.க்களும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைச் செயலகத்துக்குச் சென்று பின்னர் அங்கிருந்து யாழ். செயலகம் நோக்கிப் புறப்படுவார்கள்.

கூட்டணியின் தலைமைச்செயலகம்

கூட்டணியின் புதிய தலைமைச் செயலகம் யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. என். ரி. செல்லத்துரைக்குச் சொந்தமான யாழ்ஸ்டான்லி வீதியிலுள்ள "கனகபவனம்" கட்டிடத்தில் இன்று காலை திறந்துவைக்கப்படும்.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைக்கூட்டம் யாழ் செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

"போராட்டம்மூலம் பதவி: ஒருபோதும் ஏற்கமாடேன்"

-கிருஷ்ணராசா

[கிளிநொச்சி]

"புனிதமான இலட்சியங்களை அகிம்சைவழியில் வென்றெடுக்கும் இலட்சியப்பற்றுள்ளவர்கள் கையாளும் உண்ணாவிரதம், மறியல்போராட்டம், சத்தியாக்கிரகம் போன்றவற்றை நான் விரும்பவில்லை. பதவிகள் பெறுவதற்காக எமது மக்கள் இவவற்றைப் பயன்படுத்தக்கூடாது. இதன் மூலம் கிடைக்கும் பதவியை நான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டேன்"

இவ்வாறு யாழ் மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் பட்டியலில் பதினொராவது இடத்தைப்பெற்ற கிளிநொச்சியைச் சேர்ந்த திரு. இ. கிருஷ்ணராசா, கிளிநொச்சிப் பகுதியில் நடைபெற்றுவரும் உண்ணாவிரதம் மற்றும் கிளிநொச்சிக் கூட்டணிக்கிளைகள் எடுத்துள்ள தீர்மானம் சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும் இயக்க நண்பன் திரு. அருமைநாயகத்தை உண்ணாவிரதத்தை கைவிடுமாறு வேண்டவுள்ளேன். இன்று மறியல்போராட்டம் ஒன்றில் ஈடுபடவுள்ள இயக்கநண்பர்களை அதனை கைவிடுமாறு கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரியை மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் வேண்டுகிறேன்.

"கோப்பாய்த் தொகுதியில் இருந்து இருவரும் வட்டுக்கோட்டைத்தொகுதியிலிருந்து இருவரும் அபிவிருத்திசபைக்கு தெரிவாகியுள்ளதால் இவர்களில் எவரேனும் ஒருவர் கிளிநொச்சித்தொகுதியில் நிரந்தரமாகக் குடியேறி அத்தொகுதி மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகாணுமாறு இயக்கம் பணிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்"

என்று திரு. கிருஷ்ணராசா தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். [கெ]

உண்ணாவிரதம் தொடர்கிறது

[கிளிநொச்சி]

பரந்தன் வைரவர்கோவில் முன்றலில் ஞா. அருமைநாயகம் என்பவர் அனுஷ்டித்து வரும் சாகும்வரை உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு திரு. கிருஷ்ணராசாவும் முல்லைத்தீவு அ. வி. சபை 2வது உறுப்பினர் திரு. கே. தம்பிபிள்ளையும் சமாதானப்படுத்தியபோதிலும் திரு. அருமைநாயகம் உண்ணாவிரதத்தைக் கைவிடமறுத்துவிட்டார். உயர்மட்டப் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்னைக்குத் தீர்வு காணலாமென்றும்விரதத்தைக் கைவிடுமாறும் இவர்கள் கேட்டுக்கொண்டனர்.

அங்கு இடம்பெற்ற சுலோக அட்டைகளில் இயக்கத்தைப்

[6ம் பக்கம் பார்க்க]

'சிவா' இன்று யாழ். திரும்புகிறார்

[யாழ்ப்பாணம்]

ஈராக் விஜயம் செய்திருந்த நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் நேற்று முன்தினம் கொழும்பு திரும்பினார். இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேருவார்.

லக்ஸ்பிறே விலைகுறைப்பு

[கொழும்பு]

லக்ஸ்பிறே பால்மாவின் விலை மீண்டும் குறைக்கப்பட்டுள்ளது.

நானூறு கிறாம் நிறையுள்ள லக்ஸ்பிறே பால்மாவின் புதிய விலை ரூ. 13 - 30 சதமாகும்.

அரசாங்க ஊழியருக்கு சம்பள உயர்வு?

[கொழும்பு]

அரசாங்க ஊழியர்களுக்கு மீண்டும் சம்பள உயர்வு வழங்குவது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

இவர்களுக்கு திருமணப் பதுயை வழங்குவது பற்றியும் அரசாங்கம் இப்பொழுது ஆலோசித்து வருகிறது.

முன்னூறு ரூபாவுக்கும் 1500 ரூபாவுக்கு மிடைப்பட்ட சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்கம் ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்குவதில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று சம்பள மீளாய்வுக்குழு அரசாங்கத்திற்கு சிபார்சு செய்துள்ளது. [வெ]

பீடி இலை கடத்தல்

லொறி, வள்ளம் பறிமுதல்
ரூ. 17,000 அபராதமும்விதிக்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

பொலிஸாரும் சுங்கப்பகுதியினரும் நேற்றுமுன்தினம் கூட்டாகநடத்திய 'வேட்டை'யில் ரூ. 1,25,000 பெறுமதியுள்ள பீடிப்புகையிலை கைப்பற்றப்பட்டு இக்கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு லொறியும் இரண்டு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

இக்கடத்தலில் சம்பந்தப்பட்ட 11பேருக்கும் ரூ. 17,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

விசாரணை முடிவில் உதவி சுங்க சேகரிப்பாளர் திரு. எஸ். எம். ஜே. சேனரத்ன மேற்படி உத்தரவிட்டார்.

'பசி' படத்துக்கு தமிழக அரசு பரிசு

சென்னை, ஜூலை 19

திரு. துரையின் டைரக்ஷனில் உருவான 'பசி' தமிழ்ப் படத்துக்கு தமிழக அரசாங்கத்தின் பரிசு கிடைத்துள்ளது!

சிறந்த தமிழ்ப்படங்களுக்கு தமிழக அரசு ஆண்டுதோறும் பரிசு வழங்கிவருகிறது.

சிறந்த படத்தின் தயாரிப்பாளருக்கு 50,000 ரூபாரொக்கப் பணமும், மான்யப்பணமாக ஒரு லட்சம் ரூபாவும் பரிசாக அளிக்கப்படுகிறது. இவ்வகையில், 1978 – 1980ம் ஆண்டுக்கான சிறந்த தமிழ்ப்படமாக 'பசி' தெரிவுசெய்யப்பட்டுள்ளது. "எங்கள் வாத்தியார்" படத்துக்கு மான்யப்பணமாக 1,00,000 ரூபா வழங்கப்படுகிறது.

"புதிய வார்ப்புகள்" இரண்டாவது சிறந்த படமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

"திசை மாறிய பறவைகள்" மூன்றும் இடத்தைப் பெற்றுள்ளது. 2-ம், 3-ம் இடங்களைப் பெற்ற படங்களுக்கு 50,000 ரூபா ரொக்கப்பணம் வழங்கப்பட்டுள்ளது.

இவை தவிர, சிறந்த நடிகராக திரு. சிவகுமாரும், சிறந்த நடிகையாக செல்வி சரிதாவும், சிறந்த டைரக்டராக திரு. எஸ். பி. முத்துராமனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்திலுள்ள கிளிநொச்சி, பூநகரி, வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, கரவெட்டி ஆகிய உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு வரட்சிநிவாரணநிதியாக எட்டு லட்சம் ரூபாவை சமூகசேவைகள் அமைச்சு ஒதுக்கியுள்ளது.

சுகவீனலீவில் இருந்தவர்களுக்கு சம்பளம் இல்லை?
தாதிமார் சங்கத்தினர் இன்று ஜனாதிபதியை சந்திக்கிறார்கள்

[யாழ்ப்பாணம்]

நாடுபூராவும் தாதிமார் தொடர்ந்து சட்டப்படி வேலை செய்துவருகின்றனர். யாழ். பெரியாஸ்பத்திரியிலும் தாதிமார் சட்டப்படியே கடமை யாற்றுகின்றனர்.

நிலைமைஇவ்வாறிருக்க தாதிமார்கள் சுகவீன லீவில் நின்ற காலப் பகுதியில் அவர்களுக்கு வேதனம் வழங்கப்படமாட்டாது என்றும், சட்டப்படி வேலைசெய்த காலத்திற்கு அரைச்சம்பளமே வழங்கப்படுமென்றும் கொழும்பு சுகாதார சேவைப் பணிப்பாளர் சுற்றுநிருபம் அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேநேரத்தில் தாதிமார்கள் சங்கத்தினர் இன்று திங்கட்கிழமை ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர். புதிய சுற்றுநிருபம் பற்றியும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்படும் எனத்தெரியவருகிறது.

இந்நச்சுற்று நிருபத்தை அரசாங்க பொது தாதிமார் உத்தியோகத்தர்கள் சங்கம் கடுமையாகக் கண்டித்துள்ளது.

இச்சுற்றுநிருபம் அமுல் நடத்தப்பட்டால் தாங்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிக்கப்போவதாகவும் அரசாங்க தாதிமார் தொழிற்சங்கப் பிரமுகர் தெரிவித்தார். [கு]

வரி விளம்பரம்

தவறிவிட்டது

15-7-81 அன்று முல்லைத் தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த காலை (23 சிறி 1564) பஸ்சில் ஓர் திருமணப்பட அல்பம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழே உள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். (கிருந்த சன்மானம் தரம்படும்) இ. கனகரெத்தினம், 5-வது மைல் போஸ்ட், கோப்பாய் தெற்கு. 0383

காணவில்லை

செல்வராசா 9-ம் திகதி மாலை அச்சுவேலி சிறுவர் சீர் திருத்தப் பாடசாலையிலிருந்து விடுப்பட்டுவிட்டார். (வயது 16 நிறம் சிவப்பு, தோற்றம் வட்டை) இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் அருகில் உள்ள பொலீஸ் நிலையத்தில் அல்லது கீழே உள்ள விலாசத்தில் தகவல் செய்து அறிவிக்கவும். S. செல்வநாயகி, கன்னியா, மெயின் வீதி, திருகோணமலை. 0377

தேவை

யாழ். நகரில் பிரபல்யமான ஹோட்டலுக்கு கிடைக்கு விற்பனை யாளர்களும், பழக விரும்புகிறவர்களும் தேவை. தங்கள் முகவரியும் பத்திரங்களுடன் பின்னணப்பிக்கவும். விளம்பர இல: 0378, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 0378

பற்றறி சீர்செய்வதில் அனுபவமுள்ள இருவர் தேவை, கேல்க்கு ஏற்ற சம்பளம் உடன் சந்திக்கவும். துரை ஆன் கோ 23/3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0365

ஸ்ருடியோவுக்கு அனுபவமுள்ள எழுதுவினைஞர் தேவை, ஆங்கில அறிவுள்ள திடகாத்திரமானவர் எதிர்பார்க்கப்படுகிறார். ஓய்வு பெற்ற அரச ஊழியர்கள் விரும்பப்படுவர். 10-ம் திகதிக்கு முன்பின்னப்பிக்கவும். பிறின்ஸ் ஸ்ருடியோ கே. கோ எஸ். ரோட், சுன்னாகம். 0361

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ட்றக்ஸன் [Datsun 120 Y] கார் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- திருமதி M. இராசரத்தினம், நீதவான் வளவு, ஏழாலை தெற்கு, சுன்னாகம். 0386

யக்ச்சியில், யாழ்ப்பாணம்-கண்டி பிரதான வீதியில் 168-ம் கட்டடத்தை முன்பதாக இரண்டு பெரிய கிணறுகளுடன் 16 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். 273/12, ஸ்ரான்லி ரோட், (ஈரடிதர் கினிமா பின்புறம்) யாழ்ப்பாணம். போன்: 7075. (0374)

இரண்டு நட்டுடைய கோழிக் கூடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க:- 395, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0376

உடுவில் டச் ரோட்டிலிருந்து கத்தரோடைக்குச் செல்லும் ரோட்டில் 70 யார் தூரத்தில் இசைப்புலவர் திரு. ந. சண்முகரத்தினம் அவர்களின் வீட்டுக்குத் தெற்குப்புறமாக விடுவிட்டக்கூடிய 4 பரப்பு சதுரக்காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு R. குமாரசாமி, பென்சனர், விநாயகமுதலியார் தெரு, பருத்தித்துறை. 0363

வட்டக்கச்சி இல்வா ரோட் சந்தியில் நல்லநிலையிலுள்ள மில் விற்பனைக்குண்டு. லிஸ்டர் இன்ஜின், ஆல்லர், கிறுன்டர் ஸால் ஏக்கர் காணியுடனும் சகல உபகரணங்களுடனும் தொடர்புகொள்ளவும்: 131, ஸ்டேசன் ரோட், வவுனியா. 0364

நல்லூர் பண்டாரக்குளம் வீதியில் 5 பரப்பு 3 குளி குடியிருப்பதற்கேற்ற காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: M. S. குணராசா, தர்மலிங்கம் ஒழுங்கை, திருநெல்வேலி. 0352

விற்பனைக்கு

உகும்பராய் காட்டுவைரவர் கோயிலுக்கு அருகாமையில் பலாலி ரோட்டில் இருந்த அரசமரம் தூரத்தில் 88 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். க. கணேசானந்தன், சட்டத்தரணி, கட்டுவேட்டை. 0373

1982 ல் யாழ் மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்கான

பிரவேசப் போட்டிப்பரீட்சை

தெரிவுசெய்யப்பட்ட பின்வரும் பாடசாலைகளில் 1982-ம் ஆண்டில் பிள்ளைகளை அனுமதிக்க விரும்பும் பெற்றோர் 1981-08-31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் ரூபா 2/-க்கான தபால் கட்டளையுடன் விரும்பும் பாடசாலை அதிபருக்கு விண்ணப்பம் அனுப்பவேண்டும். மேலதிக விபரங்களுக்கு பாடசாலை அதிபர்களுடன் தொடர்புகொள்ளலாம்.

பாடசாலை அனுமதிக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு 1981-12-01-ந் திகதிக்கு முன்பு அறிவிக்கப்படும். அனுமதிக்குத் தெரிவுசெய்யப்படாதவர்கள் வேறு பாடசாலைகளில் அனுமதிகோரவேண்டும்.

1. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
2. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.
3. கொக்குவில் இந்துக் கல்லூரி.
4. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
5. யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி.
6. யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம் வித்தியாலயம்.
7. சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
8. தேவிப்பழை மகாஜனக் கல்லூரி
9. கேவலை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம. ம. வி.
10. பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி.
11. பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர் கல்லூரி.
12. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.
13. வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.
14. யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயம்.

(க. சிவநாதன்)
பிரதேச கல்வி அதிபதி
யாழ்ப்பாணம்.

1981-07-14 0355

விற்பனைக்கு

லோட்டஸ் ரயர் - ரீயூப்

1 சோடி 49-25
10 சோடி 480-00

கணநாத் இன்டஸ்றீஸ்
பெருமாள் கோவிலடி
யாழ்ப்பாணம்.

அல்லது

18A, நவீன சந்தை
உட்புறம்,
சுன்னாகம். 0387

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

தமிழ்க்காவலராகவாழ்ந்தவர் தனிநாயகம் அடிகள்"

(கொழும்பு)

"தமிழுக்காகவே வாழ்ந்தவர், தவத்திரு தனிநாயகம் அடிகளார். நாட்டுக்கு நல்வழி காட்டிய பெரியார்களில் தவத்திரு தனிநாயகஅடிகளார் தனியிடத்தைப் பெறுகிறார்."

"இவரது வாழ்வு, மறைமாவட்ட குருத்தொண்டராகி ஆசிரியர் சங்கத்தில் பொண்டாட்டப்பட்ட தவத்திரு தனிநாயகம் அடிகளரின் நினைவு விழாவுக்கு சமாதானப் அகதி ஜ. பாக்கியராஜா அனுப்பி வைத்துள்ள ஆசிச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார் இச்செய்தியை சமாதானப் அகதி மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"உலகம் முழுவதிலும் தமிழ்மொழி ஒலித்திட வேண்டுமென்ற ஆர்வத்தீ கொழுந்து விட்டெரியும் உள்ளத்துடன் வாழ்ந்தவர் அடிகளார். சொந்த நாட்டில் மதிப்பு மதிக்காமல் உலக நாடுகள் ஒவ்வொன்றுக்கும் சென்று தமிழின் தொன்மை பெருமையையும், சொல்லிச் சொல்லி உள்ளம் மகிழ்ந்தார் அவர். தமிழ்த்தாய்க்கு ஏற்படும் பெருமையைத் தனக்கு ஏற்படும் பெருமையாக எண்ணிய அடிகளார், மதத் துறவியாக பேராசிரியராக- தமிழ் மொழி பரப்பும் தொண்டராக- தமிழின் பெருமையாகவும் காவலராக-தனது வீட்டு பொருள், ஆவி அனைத்தையும் தமிழுக்காகவே அர்ப்பணித்து வாழ்ந்தார்."

"பற்றற்ற மனத்துடன் துறவியாக தூய வெண்ணிற ஆடையுடன் விளங்கிய அவரால் துறக்கமுடியாதவும் ஒன்று இருந்தது. அதுதான் அவர் தமிழ்மொழி மேல் கொண்டிருந்த பற்று-பாசம்-காதல்.

"தமிழ் வளர்த்த தாமோதரனார் போன்ற பெருமக்களைத் தந்த புகழ்பெற்ற வாழ்ப்பாண மண்ணுக்கு மேலும் புகழ்தேடித்தந்தார் தனிநாயக அடிகளார். அவரது சேவை, நினைத்து நிற்கும். நாட்டுக்கு நல்வழி காட்டிய பெரியார்களில் தவத்திரு தனிநாயக அடிகளார் தனியிடத்தைப் பெறுகிறார்."

— சபாநாயகர்

கோரிக்கை

(உடுப்பிட்டி)

இலங்கையில் நீதியும், சமாதானமும் நிலைக்க செயற்படுமாறு இலங்கைக் கத்தோலிக்க மேற்றிராணியார் சங்கம் சமய கோலிக்கட்சியையும் கேட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வகுப்பொன்றில் சம்பந்தமாக தொடர்பாளிகளுக்குள் அறிக்கையிலேயே இவ்வாறு கோரியிருக்கிறது.

யாழ்ப்பாண தொழில் நுட்பக் கல்லூரி

இறுதிப் பரீட்சைத் தராதரப் பத்திரங்கள்

1971, 1972, 1973 ம் ஆண்டுகளில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மேற்படி சகல பயிற்சி நெறிகளுக்குமான இறுதிப் பரீட்சைத் தராதரப்பத்திரங்களை பரீட்சை ஆணையாளரிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன.

இப்பரீட்சைகளில் சித்திபெற்ற மாணவர்கள் தங்களது மாணவ பிரவேச அனுமதிச் சீட்டுடன் அலுவலக நேரத்தில் வந்து இந்நிறுவனப் பதிவாளரிடம் அவற்றினைப் பெற்றுக் கொள்ளுமாறு கேண்டப்படுகின்றனர்

சி. இராசேந்திரா
அதிபர்

பல்தொழில் நுட்ப நிறுவனம்,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்,
02-07-1981. 0224

சரைச்சி தெற்கு
ப. நோ. கூ. சங்கம்
கிளிநொச்சி

கழிவு சீனி விற்பனைக்கான கேள்விவிளம்பரம்

எமது சங்கத்தின் மொத்த விற்பனை நிலையத்திலுள்ள கழிவு சீனி [Sweeping Sugar] விற்பனை செய்வதற்கான விண்ணப்பம் எம்மால் கோரப்படுகின்றன. இதை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் 25- 7- 81 க்கு முன் மீளப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 50/- ஐயாயிரம்) வை எமது சங்கத்தில் செலுத்தி ரசீது பெறப்பட வேண்டும்.

விண்ணப்பத்தில் பணம் செலுத்திய ரசீதின் இலக்கம் குறிப்பிடப்படுவதுடன் 60- 7- 81 ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் பொது முகாமையாளர், சரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி என்னும் விலாசத்துக்கு "கழிவு சீனி கொள்வனவு செய்வதற்கான கேள்வி" என இடதுபக்க மேல் மூலையில் குறித்து முத்திரையிட்டு அனுப்பவேண்டும்.

தெரிவு செய்யப்பட்டவர் அறிவித்தல் கிடைத்து மூன்று நாட்களுக்குள் முழுத் தொகையையும் செலுத்தி அவற்றை எடுத்துச் செல்ல வேண்டும்.

இங்ஙனம்
சு. பேரம்பிரசிங்கம்,
பொதுமுகாமையாளர்.
0375

யாழ். பொதுநூலக வாசக அன்பர்கள், அபிமானிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

எம்மிடம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட பிரபல எழுத்தாளர்களின் தமிழ், ஆங்கில, நாவல்கள் மற்றும் (MEDICAL) மருத்துவம், (ACCOUNTANCY) கணக்கியல், (ENGINEERING) இயந்திரவியல், (PHYSICS) இயற்பியல், (CHEMISTRY) வேதியியல், (BOTANY) தாவரவியல், சிறுவர்களுக்கான நூல்கள், சித்திரக்கதை, கையாராகி (DICTIONARY), சுருக்கெழுத்து (SHORTHAND) ஆகியன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ். பொது நூலகத்திற்கு அன்பளிப்புச்செய்ய விரும்புவோர் எடுக்கும் புத்தகங்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

இறக்குமதியாளர்களும்,
ஏக விநியோகஸ்தர்களும்

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

'ALL CEYLON' DISTRIBUTORS

(மைலன்ஸ் கட்டிடம் மேல்மாடி)
119 1/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8234, தபால் பெட்டி இல: 94
தலைமையகம்: 371, டாம் வீதி, கொழும்பு-12
0382

பிறந்ததின வாழ்த்துக்கள்

ஜோன்
கிளமன்ரைன்

20-7-1981

27, மேக்கான் வீதி, [illegible] தனத்தைக் கொண்டாடும் திரு திருமதி கிறிஸ்டி அவர்களின் செல்வப்புதல்வன் ஜோன் கிளமன்ரைன் கிறிஸ்து ஜேசுவின் அருள் பெற்று நலம்பட வாழ வாழ்த்துகிறோம். 0385

மணிவாக்கு

திருவந்தடியைப் பிடித்துக்கொண்டு நடப்பவனைப் போல் நடந்துகொள்.

— யோக சுவாமிகள்

நமது நோக்கு

வரலாற்று மிக்கதினம்

பிரச்னைகள் இல்லாத நாடு இன்றைய உலகில் எதுவுமில்லை.

அவற்றையிட்டு கண்டனங்கள் வளர்வது எளிது; நியாயமான அளவிற்கு ஒற்றுமைப்பட்டு ஆக்கபூர்வமான தீர்வுகள் காண்பது அரிது. ஆட்சியை மாற்றுவது எளிது. நல்லாட்சி நிலைத்திருக்க உதவுவது அரிது.

இன்று நாடெங்கிலும் தங்கள் முதலாவது கூட்டத்தை கூடும் மாவட்ட அபிவிருத்திச் சபைகள்பற்றி இவையே எமது முதற் சித்தங்களாகும்.

அரசியல் கட்சிகள் தத்தம் கொள்கைகள் அமைவதான அரற்றியலவது வழக்கம். இது ஒரு கண்துடைப்பு [எடுப்பர் [ஒரு சாரார்; [illegible] பாராளுமன்றம் எடுப்பர் இன்னொருவர்; ஆலங்கரிக்கப்பட்ட கிராமசபை எடுப்பர் மூன்றாவது கட்சியினர்; இவ்வாறு பிறக்க முன்னரே பெயரிட்டு ஆண், பெண்ணா அல்லது மற்றதா வென்று முடிவுகட்டுவதை இன்றைக்காவது நிறுத்துவது நல்லதென்பதே எமது கருத்து.

33 ஆண்டு சுதந்திர வாழ்வில் நாடு முன்னேறவேண்டிய அளவில் முன்னேறவில்லை என்பது தெளிவு. அதே வேளையில் புரட்சிக்கும், சர்வாதிகார ஆட்சிக்கு இடமளிக்கும் வகையில் மக்கள் ஆட்சி சீர்கெட்டுப் போகவில்லை. சமய கலாசாரத்தை வாழ்வில் அடிப்படையாகக் கொண்டு வாழும் மக்கள்; மற்றைய நாடுகள் சிலவற்றில் இடம்பெற்ற கேடுகளுக்கு இங்கு இடமளிக்கவில்லை. அரசியல் சுதந்திரம் அழிந்து விட்டதாகக் கொள்வது நியாயமற்றது.

இவ்வித வரவு செலவுத் திட்டத்தைத் தெளிவாகக் கூறும் நிதம் எமக்கில்லை. இன்று உதயமாகும் ஒரு புதிய அமைப்பின் நிர்வாகம் நம்பிக்கை. ஒளி கொண்ட மக்களின் மனமாற்றத்து ஆசியைப் பெற வேண்டுமென்ற நோக்குடன் நிலவரிதைக் குறிப்பிடுகின்றோம்.

எவர் எவரைதான் சொன்னாலும், பாராளுமன்ற ஆட்சியில் குறைகள் நிறைந்திருப்பது நாதனமானது. இக்குறைகள் தமிழ் மக்களை மட்டுமல்ல நாட்டின் ஏனைய மக்களையும் பாதித்திருப்பதை நாம் மறந்து விடலாகாது.

பாராளுமன்ற ஆட்சி முறையில் பாராளுமன்றத்துறையில் நிலையில் அமைப்பட்டுத் தத்தளிக்கின்றதை நாம் முதற்குறையாகக் கொள்ளவேண்டும். செல்வர் கிராமத்தும் வறியவர்களின் பசிதீர்க்கும் உள்ள இடைவழி நீண்டு கொண்டே போகின்றது.

இதற்கு காரணமான ஒருவிக முதலாளித்துவ அமைப்பு நாட்டின் வளர்ச்சியை தடைப்படுத்துகின்றது. மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசு ஒவ்வொன்றும் இத்தவறையே.

இந்த அடிப்படையில், இதன் விளைவாக எல்லாக் கூறுமளவிற்கு- எழுந்தோடு தமிழ் மக்கள் இன்று அனுபவிக்கும் பாகுபாடும் பாதுகாப்பற்ற நிலையும்.

இவ்விரு முக்கிய பிரச்னைகளுக்கு ஓரளவிற்கவது தீர்வுகாண பரவலாக்கப்பட்ட அரசியல் நிர்வாக அமைப்பு வழிவகுக்க வேண்டுமென்று விருப்பு வெறுப்பு எவ்வாறாயினும், தேசாபிமானம் கொண்ட ஒவ்வொரு பிரஜையும் பிரார்த்திக்க வேண்டுமென்பதே எமது வேணவா.

கற்பகம்

பனங்காடு பட்டினத்துக்குப் போன கதையே 'கற்பகம்.'

பம்பலப்பிட்டியில் 'கற்பகம்' என்னும் பனம்பொருள் அபிவிருத்திச் சபை விற்பனை நிலையம் ஒன்றை அமைச்சர் இராசதுரை கண்மையில் திறந்துவைத்தார்.

நகரத்தின் மத்தியில் இவ்வித நிலையம் ஒன்று அவசியமென்பதை நாமும் வரவேற்கின்றோம்.

பனம்பொருட் கைத்தொழில் அபிவிருத்தியின் செழிப்பில் இந்த நகர நிலையத்தின் வெற்றி தங்கியிருக்கிறது.

பல்வகை உணவாக தொழிற்படும் பனம்பொருள் அபிவிருத்திச் சபை, அரசின் மற்றும் ஏனைய கூட்டுத்தாபனங்களைப்போல் மந்தமாக இயங்கி வருவது உண்மை.

பனை உள்ள இடத்திலே அபிவிருத்தி ஆரவாரிக்க வேண்டும். பனங்காடுகளை பட்டினங்களாய் மாறவ தாக பனம்பொருள் உற்பத்தி பாதிக்கப்படுகிறது.

இச்சபை செவ்வனே இயங்கினால், அமைச்சர் கூறியதுபோல் பெருந்தொகையான வெளிநாட்டு நாணயமாற்றைச் சம்பாதிக்கலாம். பெருந்தொகையான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டும்.

பனைமரநாகிய கற்பகத்தருவை நினைக்கும்போது, இன்னொரு தனிப் பண்பும் எமது கவனத்தைக் கவருகின்றது.

தமிழ்க் கலாசாரத்தை நன்றாகப் புரிந்த அமைச்சர் அதனைக் குறிப்பிட மறந்திருக்கலாம்.

நீண்டு நிமிர்ந்து, வானத்தை நோக்கும் போக்கும், மழைக்கும், புயலுக்கும் அசையாது, அசைந்தாலும் வண்யாது. விட்டுக் கொடாது. நிலைகுலையாது நிற்கும் பண்பும் பனையின் தனிப் பண்பு.

பனங்காட்டு ராணுகிய பரமசிவன் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வழங்கிய தனிக் கொடை பனை. அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பார்கள். பனங்காட்டில் பிறந்து வளர்ந்த, அன்னையே வடிவு மக்கள் அம்மியாலல்ல மர், எந்த நிடரிலும் நிலைகலையாது நிற்பதைக் குறிக்கின்றது இந்தக் கற்பகம்.

"ஈழத் தமிழரின் பிரச்னைகளை தமிழக சஞ்சிகைகள் மூடிமறைக்கின்றன"

கருத்துரைக் கூட்டத்தில் யாழ். முதல்வர் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

"உலக நாடுகளில் உள்ளவர்கள், இலங்கைச் சம்பவங்களைத் தெரிந்த கொண்டளவுக்கு, தெரிந்து கொள்ள ஆவலாட்டும் அளவுக்கு, தமிழக இலக்கிய சஞ்சிகைகளில் ஆர்வத்தைக் காணமுடியவில்லை. இதன் காரணமாக, தமிழகத்து அறிஞர்கள்கூட நமது பிரச்னையை நன்கு தெரிந்து கொள்ள வாய்ப்பு இருப்பதில்லை."

இவ்வாறு, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் "மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது" என்ற நூல் பற்றிய கருத்துரைக் கூட்டத்தில் யாழ் முதல்வர் திரு. இராஜா விவாதத்தில் பேசுகையில் கூறினார். அவர் தொடர்ந்து கூறியதாவது:

"தமிழ் எழுத்தில் விடுதலைப் போராட்ட வரலாற்றில் 'நீல வானம்' அவர்களின் பங்கு விப்பு சாத்திரமானது. விடுதலைப் போராட்டத்தை நடத்தும் ஓர் இயக்கத்துக்கு தனது குற்றச் சாட்டுக்களை, குறைகளை புள்ளி விபரங்களை சகிதம் ஆதார பூர்வமாக எடுத்து வலியுறுத்துவதற்கு போதிய ஆவணச்சான்றுகள், இலக்கியங்கள் அவசிய தேவையாகும். இவை தமிழ் மொழியில் மட்டுமல்லாது உலக மொழிகள் பலவற்றிலும் வெளிவர வேண்டும். இன்று உலகப் பத்திரிகைகள், வானொலிபரப்புக்கள் சஞ்சிகைகள் இலங்கைத் தமிழர் பிரச்னைகளுக்கு முதன்மைதந்து செய்திகளை வெளியிட்டும் ஒலிபரப்பியும் வருகின்றன.

"உங்களுக்கு நினைவிருக்கும், ஒரு சில வருடங்களுக்கு முன்பு மலையகத் தோட்டப் பகுதிகளில் வதியும் இந்திய வம்சாவழியினரான தமிழர்கள் பட்டினிச் சாவுக்கு உள்ளானதோடு, "இல்லாமைக்கு எதிரான போராளிகள்" அச்சம்பவங்களைத் தமது சஞ்சிகை மூலமும், தொலைக்காட்சி மூலமும் இங்கிலாந்திலும் ஐரோப்பிய நாடுகளிலும் அம்பலப்படுத்தியிருந்தன. உலக நாடுகளின் கவனம் அப்பிரச்னைக்கு கவர்ந்தபட்டது. அதன் காரணமாக சிறு நிவாரணம் சம்பந்தப்பட்ட மக்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் பதினெட்டு வருடங்கள் தூரத்தில் உள்ள தமிழ் நாட்டின் இவ்வகை சஞ்சிகைகளோ அச்செய்தி பற்றி ஒரு வரிதானும் எழுதவில்லை. இத்தனைக்கும் பாதிக்கப்பட்டு, பட்டினிச் சாவுக்கு இலக்காகிய மக்கள் இந்திய வம்சாவழியினராகவும், தமிழராகவும் இருந்துள்ளனர். அப்போது மட்டுமல்ல, இன்று இடம்பெறும் நேர்வுகள் பத்திரிகைகளில், உலக வானொலிகளில் முக்கியத்துவ செய்திகளாக இடம்பெற்றதும், உலக நாடுகளிலுள்ள சஞ்சிகைகள் இங்குள்ள தமிழர் சிங்களவர் பிரச்னையை ஆதரிக்க இருந்து தமது பத்திரிகைகளில் அலங்கரிக்கின்றன சிறப்பு திருப்பங்களை அனுப்பித் தரவும் பெறுகின்றன. தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளோ தமது உள்நாட்டு வானொலி பரப்பிலும், புகைப்பட பத்திரிகைகளிலும் முக்கியத்துவம் பெற்ற நேர்வுகள் பற்றி அக்கறையற்றனவாகவே

(5ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம் பற்றி ஓர் ஆலோசனை

ஓர் அன்னிய மொழியைக் கற்க எத்தனை நாட்கள் தேவைப்படுகின்றன?

ஆங்கில மொழியை 30 நாட்களுக்குள் அல்லது அதற்கும் குறைவான காலப்பகுதியில் கற்றுத்தருவதாகச் சில 'ரியூட்டரி' விளம்பரங்கள் பிரசுரம் செய்கின்றன. மத்திய கிழக்கில் வேலைபெற்றுத் தருவதாக வாக்குறுதி ஊளிப்பயர்களுக்கும், இந்தப் 'புழு' கர்களுக்கும் அதிக வேறுபாடுள்ளன.

அண்மையில் ஆசிய நிறுவனத்தினதும், அமெரிக்க நிலையத்தினதும் உதவியோடு பல்கலைக்கழக ஆங்கிலப் போதனாசிரியர்களுக்குக் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது.

இதனை வழிநடாத்தியவர்கள் இரு அமெரிக்கர். கிடுகிடு கிழவிபோல் தோற்றம் அளித்தாலும் சுறுசுறுப்புமிக்க நிறமைசாலி திருமதி மொல்டவான் ஒருவர். மற்றவர் நாகேஷ் போன்று நடிக்க வல்ல இளைஞர் திரு. தேம்வி வார்ட்.

நவீன மொழியில் அறிவையும், நடைமுறை அனுபவத்தையும் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட புதிய ஆங்கிலப்

(5ம் பக்கம் பார்க்க)

மக்கள் கருத்து

மாணவர் வேண்டுகோள்

உயர்கல்விபெறும் நோக்கத்துடன் எண்ணற்ற இன்னல்களுக்கிடையில் பல்லாயிரம் கழகத்தை அடைந்த மாணவர்களுக்கு மேலும் ஓர் இன்னல் ஏற்பட்டுள்ளது யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் அமைந்துள்ள பகுதியில் ஒலிபெருக்கி பாவனை தான் முக்கியமான கஷ்டமாகும். பல்கலைக் கழகத்தில் விரிவுரைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அருகில் விரிவுரைகளுக்கும் மேலாக ஒலிபெருக்கி விளம்பரம் பல்கலைக் கழகத்தினுள் விரிவுரைகளை தடைசெய்கின்றன.

ஆகவே இப்பகுதியில் வாழும் மக்கள் இப்பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு இன்னல்செய்யாது இருக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

விரிவுரைகள் நடைபெறும் வேளையிலாவது ஒலிபெருக்கி பாவனைக்கு உத்தரவு வழங்கும் அதிகாரிகள் விரிவுரைகள் நடைபெறும் நேரத்தை கவனத்தில்கொண்டு ஏனைய நேரங்களில் ஒலிபரப்பினையோ, விளம்பரத்தையோ, குறிப்பிட்ட கழக வளாகத்தின் அண்மையில் பாவிக்க அனுமதியாவது கொடுக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தி. பத்மநாதன்,
யாழ்ப்பாணம்.

"'அமிர்' மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை: பாராளுமன்றத்தின் மதிப்பைக் குறைக்கும்"

(சாவகச்சேரி)

"ஆட்சிப் பொறுப்பு மிகவும் முக்கியமானது, பாடசாலையில் ஆசிரிய பயிற்சி எவ்வளவு முக்கியமோ, வண்டிஓட்டும் சாரதிக்குப்பயிற்சி எப்படி முக்கியமோ, அதே போன்று மன்னர் ஆண்ட காலத்தில் சிறு பராயம்தொட்டுப்பயிற்சி பெற்று ஆட்சி ஆரம்பிக்கின்றான். மன்னனின் ஆட்சி போல் மக்கள் ஆட்சி நிலவும் நம் நாட்டை ஆளும் ஒவ்வொருவரும் பயிற்சிபெற வேண்டும். நேரடிப்பொறுப்பு இல்லாவிட்டாலும் யார் ஆள வேண்டும் என்ற பொறுப்பு ஒவ்வொருவருக்குமுண்டு. அத்தக் கடமையைப் பொறப்புணர்ச்சியுடன் செய்யாவிட்டால் ஆட்சியிலுள்ள குறைபாட்டுக்கு நாம் ஒவ்வொருவரும் இலக்காவோம்.'

மேற்கண்டவாறு சாவகச்சேரி எம். பி. இரு. வி. எம். நவரத்தினம் மீசாலை வடக்கு கொயிலடிமனை நாவலர் சன சமூக நிலைய இங்குராரர்ப்பணக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

இரு. தி கலைசபாபதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர்தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

'இப்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்புக்குத் தமிழ் மக்கள் பங்காளிகளாக இல்லாவிட்டாலும், பாராளுமன்ற அமைப்பை ஏற்ற அடிப்படையில் இன்றைய நடைமுறையிலுள்ள அரசு வந்தேறிகளாகிய நாமும், தொலைக்காட்சி மூலமும் இங்கிலாந்திலும் ஐரோப்பிய நாடுகளிலும் அம்பலப்படுத்தியிருந்தன உலக நாடுகளின் கவனம் அப்பிரச்னைக்கு கவர்ந்தபட்டது. அதன் காரணமாக சிறு நிவாரணம் சம்பந்தப்பட்ட மக்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் பதினெட்டு வருடங்கள் தூரத்தில் உள்ள தமிழ் நாட்டின் இவ்வகை சஞ்சிகைகளோ அச்செய்தி பற்றி ஒரு வரிதானும் எழுதவில்லை. இத்தனைக்கும் பாதிக்கப்பட்டு, பட்டினிச் சாவுக்கு இலக்காகிய மக்கள் இந்திய வம்சாவழியினராகவும், தமிழராகவும் இருந்துள்ளனர். அப்போது மட்டுமல்ல, இன்று இடம்பெறும் நேர்வுகள் பத்திரிகைகளில், உலக வானொலிகளில் முக்கியத்துவ செய்திகளாக இடம்பெற்றதும், உலக நாடுகளிலுள்ள சஞ்சிகைகள் இங்குள்ள தமிழர் சிங்களவர் பிரச்னையை ஆதரிக்க இருந்து தமது பத்திரிகைகளில் அலங்கரிக்கின்றன சிறப்பு திருப்பங்களை அனுப்பித் தரவும் பெறுகின்றன. தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளோ தமது உள்நாட்டு வானொலி பரப்பிலும், புகைப்பட பத்திரிகைகளிலும் முக்கியத்துவம் பெற்ற நேர்வுகள் பற்றி அக்கறையற்றனவாகவே

(5ம் பக்கம் பார்க்க)

ரமழான் சிந்தனை

நிச்சயமாக அல்லாஹ்வும், அவன் மலக்குகளும் ஸலாத் சொல்லிப்பிடுபவர்கள் மீது ரஹ்மத் அருள் சொரிகிறார்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்.

(ஆதாரம்—புஹாரி உக்மாரம்)

ஸஹர் முடிவு : 4-27, நோன்பு திறக்கும் நேரம் : 6-32
— தொகுப்பு : மௌலவியா பௌசியா ஸரீம்

ஹோட்டலில் பயங்கர விபத்து: 300 பேர் பலி!

வாஷிங்டன், ஜூலை 19

அமெரிக்காவில் நாற்பது மாடிகளைக் கொண்ட ஹோட்டல் ஒன்றின் நான்காவது மாடியிலுள்ள தொங்கு நடைபாதை இடிந்து விழுந்ததால் சுமார் 300 பேர் பலியாகி விடுக்களாமென அஞ்சப்படுகிறது.

இவர்களில் 111 பேரின் சடலங்கள் இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. இவ்விபத்தில் இன்போது சுமார் 180 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த ஹோட்டலில் கீழ் இருந்த நடைபாதையில் நடனம் ஆடிக்கொண்டிருந்தவர்களை மேலேயுள்ள தொங்கு நடைபாதையில் உள்ளவர்கள் பார்த்துக்கொண்டிருந்த போதே இவ்விபத்து இடம் பெற்றது.

இந்த ஹோட்டல் 5 கோடி 50 லட்சம் டாலர் செலவில் நிர்மாணிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (வெ)

தி. மு. க. உறவு

சென்னை, ஜூலை 19

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலைக் கட்சிகளுடனான உறவைத் தானாகவே முறித்துக்கொள்ளாது என்று தி. மு. க. தலைவர் திரு மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி மேலும் கூறுகையில், தமிழ்நாட்டில் உள்ள மதுபானக் கடைகளில் கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது. இது அ. தி. மு. க. வின் நிர்வாகம் சரிவர நடவாமையினால் எக்கச்சக்கமாக எடுத்துக்காட்டுகிறது என்றார். (வெ)

தெ. லெபனான் மீது இஸ்ரேல் பீரங்கி, விமானத் தாக்குதல்

பெய்ரூத், ஜூலை 19

இஸ்ரேல், தெற்கு லெபனான் மீது மூன்றாவது தினமாக நேற்றுப் பீரங்கி, விமானத் தாக்குதல்களை மேற்கொண்டது.

இஸ்ரேலின் வடபகுதியைப் பகைஸ்தீனியர்கள் ராக்கெட் மூலம் நேற்றுத் தாக்கினர். இஸ்ரேல் லெபனான் மீது மேற்கொண்ட தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவர்களின் சடலங்கள் சிதைந்த நிலையிலுள்ள கட்டிடங்களுக்கு மேலிருந்து நேற்று மீட்கப்பட்டது.

பலஸ்தீனிய கொமாண்டோக்களுக்கு எதிராக இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல் ரீக்கா ஆக்கிரமிப்பு அதன் நட்பு நாடுகளுக்கு எதிராக முடியின் அமெரிக்கா தாயகப்படுத்தியுள்ளது. (வெ)

இஸ்ரேலின் நட்பு நாடுகளுக்கு இவ்விவகாரத்தில் தலையிட்டால், அவற்றுக்கு எதிராக அவும் தாக்குதல்களை நடத்த இஸ்ரேல் தயங்காதென்றுங் அவ்வதிகாரி தெரிவித்தார்.

லெபனான் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலினால் அமெரிக்கா ஆத்திரமடைந்துள்ளது. இஸ்ரேலுக்கு எப்-16 யுத்த விமானங்களை வழங்கும் தாயகப்படுத்தியுள்ளது. (வெ)

கம்யூனிஸ்ட் கட்சிப் புதிய தலைவர்

வார்சோ, ஜூலை 19

போலந்துக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய தலைவராக ஸ்ரனிஸ்லோ கார்வியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தனது வெற்றி போலந்திக் சோஷலிஸ ஒருமைப்பாட்டுக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியென்று இவர் தெரிவித்துள்ளார். (வெ)

புத்தம் புதிய பாலின் அத்தனை சிறப்பும்...

பெயார் பிரான்ட், குடும்பத் தேவைகளுக்குகந்த மிகச் சிறந்த முழு ஆடை கொண்ட பால் மா. உங்கள் குழந்தைகள் செழிப்புடன் வளர பெயார் பிரான்ட் பால் மா.

உலகின் உயர்ந்த பால்பண்ணைகளில் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டு, மிகக் கடுமையான தரக்கட்டுப்பாட்டின் கீழ், புத்தம் புதிதாக இருக்கும் வண்ணம் உலோகத்தாளில் அடைக்கப்பட்டுள்ளது. உங்கள் பணத்திற்கு அதிசிறந்த பெறுமதி பெயார் பிரான்ட்.

சுகத்தையும் அதேவேளை செலவுபற்றியும் சிந்திக்கும் குடும்பங்களுக்கு மிகப் பொருத்தமானது.

தேநீர், காப்பி அல்லது ஐஸ்கிறீம், இனிப்பு வகை தயாரிக்க முழு ஆடை கொண்ட பெயார் பிரான்ட் பால் மாவைப் பாவியுங்கள். விரும்பினால் தேங்காய்ப் பாலுக்குப் பதிலாக இதனை சமையலுக்கும் பயன்படுத்தலாம்.

பெயார் பிரான்ட்

400 கிறும் ரூ. 18/50

பெயார் பிரான்ட் முழு ஆடைப் பால் மா
உங்கள் பணத்திற்கு அதி சிறந்த பெறுமதி.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) 10-30, 2-30 6-00, 9-30 சதுவிளாந்தி - வீரர் ஆயிரம் ஜென்மங்கள்

லிடோ யாழ் நகர் 10 30, 2 30, 6-00, 9-30 தசாவதாரம்

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 10-30 2-15, 6-30, 9-45 பாக்கியராஜ்-அஸ்வினி-சங்கிலி முருகன்
ஒரு கை ஓசை

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-00, 4-00 7-00 9-45
The Man From Hong Kong
(Color-Karate Film)
வெகு விரைவில்
சங்கராபரணம்

ராணி (யாழ்ப்பாணம்) 10-30, 2-15, 6-00, 9-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
எங்கள் தங்கம்
(புத்தம்புதிய பிரதி — கலர்)

எமது அடுத்த வெளியீடு
பாக்கியராஜாவின்
சுவர் இல்லாத சித்திரங்கள்

வின்சர் தினசரி 10-30, 2-30, 6-00 இரவு 9-30 (யாழ்ப்பாணம்)
கமல், ரஜனி, ஸ்ரீதேவி நடித்த
K. பாலசந்தரின்
மூன்று முடிச்சு
(புதிய பிரதி)
21-7-81 செவ்வாய் முதல்
அதேரளின் வேண்டுகோளை முன்னிட்டு மீண்டும் திரையிடப்படுகிறது
"MOVING VIOLATION"
(Color)

தொடர்ந்து எல்லா காட்சிகளும்
ஹவுஸ்புல் காட்சிகளாக
ஓடிக்கொண்டிருக்கின்றது
ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6 00, 9-30
★ எம். ஜி. ஆர், ★ லதா

பல்லாண்டுவாழ்க
[ஈஸிமகி கலர்]

ஈழத் தமிழர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுகின்றன. அல்லது எமது பிரச்னையைப் பற்றிப் பூரணமாகத் தெரிந்துகொள்ள முயலாமல் ஏதாவது எழுத வேண்டும் என்பதற்காக பத்திகளை நிரப்புவதற்காக எதை யாவது கிறுக்கிவைக்கின்றன. அண்மையில் நடைபெற்ற யாழ்ப்பாணச் சம்பவங்களைப் பற்றிப் பரஸ் தாபியாத "குமுதம் விடகு" தனது "வம்பு நேரத்தில்" எதை யெதையோ எழுதியுள்ளது. "தேவையும் பேசுகிறது" ஆசிரியர் மூன்று ஒரு பயணக் கட்டுரைத் தொடரில் தந்தை செல்வாவை ஒரு நல்ல சிங்களவர் எனக் குறிப்பிட்டிருந்தது. இன்றும் எமது நிலைமைகளை வருந்தி "ஆனந்த விகடன்", "இதயம் பேசுகிறது" போன்ற வார்த்தை சஞ்சிகைகள் இங்குள்ள தமிழர் பிரச்னை பற்றி எழுதும் பிரச்னையைக் குழப்புவதைவிட எழுதாமல் விடுவதே மேலானது. "கல்கி" பத்திரிகை ஆசிரியர் "கல்கி" காலத்திலிருந்தே எமது பிரச்னையில் பெரும்பாலான ஈடுபாடு காட்டி வந்திருப்பது தெரிந்ததே. ஆயினும், இறைமையை மீட்டுக் கொண்டிருக்கும் தமிழீழம் தனது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்யும் தருணியடையது என்பதை வேறு எந்த நாட்டிலும் பார்க்க நாம் கூடுதலாகத் தமிழகத்தில் நன்கு பிரச்சாரம் செய்ய வேண்டும். தமிழகஞ் சிங்களவர் பிரச்னையைக் கிரமத்துக்கொண்டு முழுமூச்சுடன் ஏற்படுத்தித் தர வேண்டும். அதற்கு "நீலவாணன்" நூல் துணை புரிய வேண்டும். ஈழத் தமிழரதும் யிரச்னைகளை அறியும் ஆவல் அங்குள்ள தமிழர்களிடம் அங்குள்ள வாசகர் வட்டாரத்தில் வளர்க்கப்பட வேண்டும். அதைத்தொடர்ந்து "தமிழீழ விடுதலை இலக்கியங்கள்" அங்கு பரப்பப்பட வேண்டும். பிரச்னைகளை உண்மையாக அணுகி ஆதாரபூர்வமான புள்ளி விபரங்களுடன் எழுதப்படும் விடுதலை இலக்கியங்களுக்கு உதவுவதற்குப் பலர் ஆயத்தமாகவுள்ளனர். எனவே நீலவாணன் போன்றவர்களும் ஏனையோரும் அந்த முயற்சியில் இறங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். சந்தர்ப்பம் சூழ்நிலைகளுக்கு அமைவாக எழுதப்படும் இலக்கியங்களுக்கு எப்பொழுதுமே நல்ல வரவேற்புக் கிடைக்குமென்பதை ஏனைய எழுத்தாளர் புரிந்து கொண்டு இந்த முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்" என்றார்.

3-வது ஹவுஸ்புல் வாரம்
ஹரன் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு-சுஹாசினி
நூல் வேலி
(கலர்)
தொலைபேசி 331

வெல்லி (நாவிலர்) தினசரி 6-15, 9-30 சனி, ஞாயிறு 2-30 ரஜனிகாந்த் - படாபட் 5ல் இருந்து 60 வரை

நாகம்ஸ் (கல்லூரம்) தினசரி 6-15, 9-30 சனி ஞாயிறு 2-30 சிவாஜி-பிரமிளா
சுவரிமான் (கலர்)

இன்றைய பலன்

ஆடி மாதம் 5ம் திகதி
திங்கட்கிழமை
(20-7-81)

மேடம்- நினைத்தகாரியத்தில் வெற்றியுண்டு. எதிர்பாராத வகையில் உங்களுக்கு ஆதரவு பெருகும். பணத்தேவைகளை உங்களைப் பராமரிப்பதே செய்வார்கள். நெற்பயிரினால்.

இடபம்- சமயோசிதபுத்தி உங்களுக்குத் தாராளமாக சித்தியாகும். தடைகள் தெரிந்தாலும், மக்கள் மூலம் மகிழ்ச்சிமான சம்பவங்கள் இடம் பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும்.

மிதுனம்- புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலை தூக்கும். புத்திரர்களால் புகழ் கிடைக்கும். இன்ற நம்பிக்கையுடன் இல்லத்திலும் அமைதி தவழும். இரக்கத்தால் நன்மை.

கடகம்- பணமுடை தீரும். பத்துக்களின் தொடர்புகள் பெருகும். குடும்பத்தில் பரபரமான சூழ்நிலை தென்படும்.

சிங்கம்- ஆபத்து மிகவும் உண்டு. அடுத்தக் கெடுப்பவர் அருகிலேயே இருப்பர். எதையும் ஆராய்ந்து பார்ப்பதே நலம்.

கன்னி- நீண்ட நாள் பிரச்னைக்கு இன்றாவது முடிவு ஏற்படும். தாய்வழிமூலம் தனவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு அதிர்ஷ்டவாய்ப்புகளும் கிடைக்கலாம். முன்னேற்றமான தினம்.

துலாம்- கனிவான பேச்சு. வாக்கும் பொன் பார்வை கன்னியர் உறவு, சாதுரியத்துக்கும் இடமுண்டு. வளர்ச்சிமான நாள்.

விருச்சிகம்- பூமிமீனங்களால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். வாகனம் செலுத்துவோர் மிகவும் கவனமாக இருக்கவும். எதிலும் உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

தனு- பொன்னான வாழ்வு பெண்ணாலே கிட்டும். கணவியம் கடைவிரிக்கும். கடமையும் சிறக்கும்.

மகரம்- திடீரமான தவிர்க்க சந்திக்கிடம் உருவாகும். அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர். கடிதமூலமாகவர்கள் கவனம் செலுத்தவும், சில

இறந்த குதிரையை சவுக்கால் அடித்து...

மாஸ்கோ, ஜூலை 19

ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் தலையிடாது. இறந்த குதிரையைச் சவுக்கால் அடித்து எழுப்புவதுபோலாகும் என்று சோவியத் ஏடான 'டாஸ்' தெரிவித்துள்ளது.

அதேவேளை அமெரிக்கா ஐராணுவ ரீதியில் சோவியத் யூனியனைவிட முன்னேற்றம் அடைவதை அந்நாடு பார்த்துக்கொண்டிருக்காது என்று சோவியத் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். (வெ

பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கரம்பன் சண்முகநாதன் மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இன்று நிகழ்ந்தது விழாவும் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை பா. உ. திரு. வ. வ. இராதிநாயகம் பிரதம விருந்தினராகவும் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. ரி. சே. என். நிகலும் பாரியாரும் கௌரவவிருந்தினராகவும் கலந்துகொள்ளுகிறார்கள். திருமதி ரோசம்மா தாமலிங்கம் பரிசில்களை வழங்குவார்கள். (கு

ஜனாதிபதியின் லண்டன் விஜயம்

(கொழும்பு)

பிரிட்டிஷ் முடிசூடிய இளவரசர் சார்ல்ஸின் திருமணவைபவத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், அவரின் பாரியாரும் இம்மாதம் 28-ம் திகதி லண்டனிற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

எலிசபெத் மகாராணியின் அழைப்பையடுத்தே இவர்கள் இருவரும் லண்டன் செல்கின்றனர்.

இளவரசர் சார்ல்ஸின் திருமணம் இம்மாதம் 29-ம் திகதி லண்டனிலுள்ள செண்ட் போல் தேவாலயத்தில் நடைபெறவிருப்பது தெரிந்ததே (வெ

திருட்டு

(மன்னார்)

தலைமன்னார் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் இரவு நேரத்தில் புகுந்த திருடர்கள் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான ஜனி வளையங்களையும் நாணயப் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

தலைமன்னார் கிராமம் ஜீ. மரியதாஸன் ஈரூதீன் என்பவரது வீட்டிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இத்திருட்டுச் சம்பவம் பற்றித் தலைமன்னார்ப் பொலிசில் புகார்செய்யப்பட்டதை அடுத்து தலைமன்னார்ப் பொலிசார் புலன்விசாரணையில்ஈடுபட்டுள்ளனர். இது வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

ஆங்கிலம் பற்றி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பாட நூல்களை எல்லாரு கற்பிக்கவேண்டுமென்பதே இக்கருத்தரங்கின் நோக்கம்.

இப்பாடநூல்கள் இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பள்ளிக்கூடங்களில் அனுமதிக்கப்படுவர் ஆண்டுக்கு இவ்வாறாக வழங்கப்படும். எட்டு வாரத் தீவிர ஆங்கிலப் பயிற்சியில்போது இந்த நூல்களே பயன்படுத்தப்படுகின்றன (புத்தகங்கள் பின்னர் திரும்பிப் பெறப்படுக எப்பது வேறு விஷயம்).

அரசினால் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு இந்தப் பயிற்சி பயன்படாது என்று கருதிக்காட்டிய இரு விரிவுரையாளர்கள், ஆங்கிலம் நன்கு தெரிந்தவர்களுக்கும் இது உதவாது என்றும் குறிப்பிட்டனர்.

இடைநிலையில் உள்ளவர்களுக்கே இந்தப் பாட நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன 'பள பள' பாடநூல்களைப் பார்த்தாலே ஆங்கிலம் படிக்க ஆசைவரும் என்பதில் ஐயமில்லை.

ஆங்கில அறிவைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிட்ட நிலையில் உள்ளவர்களை இப்பயிற்சி ஒரு படி உயர்த்தும் என்பதா நிச்சயம்.

ஆங்கில ஆசிரியன் இறைவன் அல்ல ஆனால் இறைவனைச் செய்தாலே பெரும் சாதனைதானே!

-வெளியான்

எம்மிடம் .....
இறக்குமதிசெய்யப்பட்ட

றெக்சின் குளோத்
பிளாஸ்டிக் குளோத்
(F) போமிக்கா சீற்
பொலித்தீன் வகைகள்
ஒட்டுப்பசை வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம்.

எச். இஸ்மாஸ்ஜி அன் கோ
71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

ரூ.1,00,000 கடத்தல்பொருள் தலைமன்னாரில் வேட்டை

[மன்னார்]

இந்தியாவுக்குக் கடத்திச் செல்லப்படவிருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியுடைய கடத்தல்பொருட்களைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

தலைமன்னார் பகுதியிலுள்ள வீடொன்றில் மூடைகளாகக் கட்டப்பட்டிருந்த கடத்தல் பொருட்களே பொலிசாரினால் கைப்பற்றப்பட்டது.

சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டு தலைமன்னார் உதவி சுங்க அதிகாரியின் விசாரணையையடுத்து சந்தேகநபருக்கு ரூபா 4000 அபராதம் விதிக்கப்பட்டு கடத்தல் பொருட்களும் பறிமுதல்செய்யப்பட்டன.

எம்மிடம்.....
உள்ளூர், வெளியூர்

காப்பற் வகைகள் (Floor)
லொறிகளுக்கு
பொடி அடிக்கும்
(F) பிற்றிங்ஸ்.....
மெழுகுசீலை வகைகள்

இன்னும் பல பொருட்கள் நியாய விலையில் கிடைக்கும்.

H. ESMAILJEE & Co
71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

குடும்பத்தகராறு:

கணவன் வெட்டிக் கொலை மனைவி கைது!

[மட்டக்களப்பு]

கணவன் மனைவிக்கிடையே அடிக்கடி மூளும் சண்டை கொலையில் முடிந்திருக்கிறது! கொலையுண்டவர் கணவன்!

இச்சம்பவம் அம்பாறை மாவட்டத்திலுள்ள இங்குறணி முகங்கல எனும் கிராமத்தில் நிகழ்ந்துள்ளது.

இக்கிராமத்தைச் சேர்ந்த அத்தபத்து ஆராச்சிகே ரம் பண்டா [38 வயது] என்பவரே கொலை செய்யப்பட்டவராவர். காலஞ்சென்றவரின் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற மரண விசாரணையின்போது சந்தேகநபர்களில் ஒருவரான ஹெட்டியாராச்சி மகிந்தா [19வயது] என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

''எனது அக்காவை சில வருடங்களுக்கு முன்னர் காலஞ்சென்றவர் திருமணம் செய்தார். இரண்டு குழந்தைகள் உண்டு. சம்பவதினம் இரவு 9 மணியளவில் அக்காவை கணவர் அடித்து விரட்டிவிட்டதாகக் கூறினார். 'நீ போய் உன் கணவனிடம் சென்று இது' என்று அம்மா கூறி திருப்பிவிடவே என்னிடம் வந்து உதவிகேட்டார். நான் மனம் இரங்கி அன்றிரவு பத்து மணியளவில் அவர்களின் வீட்டிற்குச்சென்று கதவைத் தட்டினேன். அப்போது காலஞ்சென்றவர் இரும்புக்கம்பியுடன் கதவைதிறந்து என்னைத் தாக்க முற்பட்டார். உடனே நான் பயத்தால் ஓடி புல்வெளியில் ஒளிந்துகொண்டேன். சில நிமிடங்களால் அவரும் அக்காவும் சண்டைபிடிக்கும் சத்தம் கேட்கவே விட்டுப்பக்கம் சென்று எட்டிப்பார்த்தேன். அத்தான் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அக்கா கத்தியுடன் காணப்பட்டார். என்ன நடந்தது என்று கேட்க கழுத்தை வெட்டிவிட்டதாக அக்கா கூறினார்''என்றார்.

காலஞ்சென்றவரின் மரணம் குறித்து வாக்குமூலங்கள் பதிவு செய்த மட்டக்களப்பு நகர மரணவிசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் கொலை என்று தீர்ப்பளித்து காலஞ் சென்றவரின் மனைவி மாலினி [25 வயது], அவரின் தம்பி ஹட்டியாராச்சி மகிந்தா [19வயது] இருவரையும் அம்பாறை நீதிபதி முன்னிலையில் ஆஜர்செய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

மெஷின் மைன்டர் தேவை

அச்சடிக்கும் இயந்திரம் இயக்குவதிலும் திருத்துவதிலும் அனுபவமும் தேர்ச்சியும் உள்ளவர்கள் தேவை. வயது, அனுபவம் ஆகியவற்றை குறிப்பிட்டு நற்சாட்சிப் பத்திரப்பிரதிகளுடன் 25-7-81ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 0384
C/o ஈழநாடு லிமிட்
யாழ்ப்பாணம். 0384

மிகவும் குறைந்த விமானக் கட்டணத்தில்

மத்தியகிழக்கு — சிங்கப்பூர்
பாரிஸ் — நைஜீரியா
லண்டன் ரூபா 7,500-00 (ஒருவழி)
ரூபா 14,205-00 (இருவழி)

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும்
உலகின் எப்பாகத்துக்கும்

எவ்வித கூடுதல் கட்டணமுமின்றி நீங்கள் விரும்பிய விமானத்தில் பிரயாணஞ் செய்வதற்குரிய

விமான டிக்கட்டுகள்

லங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் அமெரிக்கன், எக்ஸ்பிரஸ் பிரயாணக் காசோலைகள்

★ நைஜீரியன் விசா

ஆகியவற்றை கொழும்பு செல்லாமல் யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ள பிரபல்யமான

MACKINNON, MACKENZIE & Co.
of CEYLON LIMITEDன்

ஒரேயொரு யாழ்ப்பாணக் கிளையான

எங்களை நாடுங்கள்

மக்கினன்ஸ் ட்றவல் சேவிஸ் (சிலோன்) லிமிட்

8, பருத்தித்துறை வீதி, - யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 92 தொலைபேசி: 8154

இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கத்தின் ஆதரவிலான குருபூர்ணிமா ஆராதனை நிகழ்ச்சியில் இன்று மாலை ஸ்ரீ பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகளின் அருள் உரையும் பஜனையும் நல்லூர் திவ்ய ஜீவன சங்கமண்டபத்தில் நடைபெறும். அத்துடன் மார்க்கண்டு சுவாமிகளின் அருள் உரையும்இடம் பெறும்.

[யாழ்ப்பாணம்]

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகளது பஜனை நிகழ்ச்சிகள் இன்று மாலை இணுவில் ஸ்ரீ பரராஜசேகரர் கோவிலிலும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலும் நடைபெறும்.

சங்கிலி வழிப்பறி!

[கோண்டாவில்]

ஆலயதரிசனஞ் சென்றுவிட்டு வீடு திரும்பிய பெண்ணின் சங்கிலி அறுக்கப்பட்ட சம்பவம் இணுவில் காரைக்கால் சிவன்கோவிலுக்கு அருகாமையில் நிகழ்ந்துள்ளது.

இரவுநேரம் ஆலயத்தில் இருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது சைக்கிளில் நின்ற ஒருவர் பெண்ணின் சுமார் ஐயாயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியை அறுத்த பொழுது அப்பெண் அவலக்குரல் எழுப்பியும் பலன் கிடைக்கவில்லையாம்!

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள குளிர் சாதனப்பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்லமுத்து ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் 173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0389

பகிரங்கக் கூட்டம்

[கொழும்பு]

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற பயங்கரவெறியாட்டம் தொடர்பாக மாபெரும் தொழிலாளர்கட்சி அமைப்புக்கான தற்காலிக தேசியக்குழுவின் ஆதரவில் கொள்ளுப்பிட்டியிலுள்ள சி. எம். யு. மண்டபத்தில் இன்றுமாலை பகிரங்கக்கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கின்றது.

மாணவன் தாக்கப்பட்டான்

[மன்னார்]

ஆசிரியரால் மோசமான முறையில் தாக்கப்பட்ட 10 வயது மாணவன் ஒருவன் மணிக்கட்டில் பலத்த காயம் ஏற்பட்டு மன்னார் அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாதோட்டம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாகப் பொலிசார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

உண்ணு...

[1ம் பக்கத்தொடர்ச்சி

பலவீனப்படுத்தும்வகையில் அமைந்த சுலோக அட்டைகளை நீக்குமாறு திரு. கிருஷ்ணராசா கேட்டுக்கொண்டதையடுத்து குறிப்பிட்ட சுலோக அட்டைகள் நீக்கப்பட்டன.

[கொ-அ]

பெண்ணிடம் கஞ்சா

[மன்னார்]

சூட்கேசில் கஞ்சா கடத்திய பெண், ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்!

மன்னார் - தலைமன்னார் பஸ்சை சோதனையிட்ட தலைமன்னார் பொலிஸ் சார்ஜண்ட் நடராசலிங்கம், கான்ஸ்டபிள் விமலரத்ன ஆகியோர் ''ஜேம்ஸ்பொண்ட் சூட்கேசில்'' 16,500 கிறேன் கஞ்சா கடத்திய பெண் ஒருவரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்தனர். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட செயலாளராகப் பதவிஏற்றுள்ள திரு. தேவநேசன் நேசையாவை வரவேற்று, யாழ். மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத் தலைவர் திரு. சி. யோகேந்திரநாதன் அறிக்கை ஒன்றை வீடுத்துள்ளார்.

இதுவரை சரியானமுறையில் திறமைகள் அடையாளம் காணப்படாது போதியளவு பயன்படுத்தப்படாத நாற்பத்தைந்து பட்டதாரி அபிவிருத்திஅலுவலர்களதுபிரச்னைகளுப் புதிய செயலாளரினால் அனுதாபத்துடன் அணுகப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா-அ]

மரண அறிவித்தல்

வே. அம்பலவாணர்

மிருதங்க வித்துவான் அம்பலவாணர் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற தம்பதிகளின் மகனும், காமாட்சி அம்பாளின் அன்புக்கணவரும், ரகுநாதன் [ஆர். எம். பி.] சந்தானலட்சுமி, ஜெயராமன், சிறீனிவாசன், சரஸ்வதி ஆகியோரின் அன்புத்தந்தையும், ஜெயகுமார் [கே. ஜி. இன்டஸ்ரீஸ்] மாமனும், பொன்னம்மா, பவளரெத்தினம், காலஞ்சென்ற கணேசு ஆகியோரின் சகோதரரும், தங்கம்மாவின் மருமகனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை 20-7-81 காலை 10 மணிக்கு இல. 2, நாச்சிமார் கோவில் வீதியில் இருந்து ஈமைக்கிரிகைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். 0388

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office SrLanka
Regd No. QB 100286/81, P. O. Box 49, Jaffna. தொலைபேசி 7707, 389, 8126